1987 மார்ச் 4]

காரச் சத்திரம் அருகில் ஒன்று, தேசிய நெடுஞ்சாலை-7-ல் 427 கிலோ மீட்டரில் சமயநல்லூர் அருகில் ஒன்று, சேலம் நகரிலுள்ள பேருந்து நிலையத்திற்கு அருகில் ஒன்று, ஆக 7 இடங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்தல்.

55—(*வினா எண். 12434)—திரு எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளச்சல் துறைமுகம் விரிவுபடுத்தும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்தும் பணிகள் தொடங்கப்பெற்று முதற் கட்டமாக உள்ளமைப்புப் பணிகளான துறைமுகத்திற்கு அணுகுசாலை அமைத்தல் ஆர். சி.சி. பாலம் கட்டும் பொருட்டு சீஸ்மிக் சர்வே, நிலத்தினைத் துளையிடுதல் முதலிய பணிகள் ரூ. 5.05 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மற்ற கருத்துக்களான சரக்குக் கொட்டகை கட்டுதல், இழுவைப் படகுகள் வாங்குதல் முதலியவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்துகிற பணியில் புதிதாக திருத்தப்பட்ட மதிப்பீடு ஏதேனும் இவ்வாண்டு தயாரிக்கப்பட்டதா? மணவாளக்குறிச்சியில் மணல் ஆலை நிர்வாகம் குளச்சல் துறைமுகத் திட்டப் பணிகளுக்கு, திட்ட மதிப்பீட்டில் பாதித் தொகை அரசுக்கு வழங்குவதற்குத் தயார் நிலையில் இருப்பதால், திருத்திய மதிப்பீடு ஏதேனும் இவ்வாண்டு தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ரூ. 83 இலட்சம் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் பாதித் தொகையை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்ற நிலை ஏற்பட்டபொழுது, ஏற்கனவே போட்ட மதிப்பீட்டில் அது குறைவாக இருக்கிறது, இது கொஞ்சம் அதிகமாக இருக்கிறது என்பதிலேபேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. எனவே, அதிலே ஒரு முடிவு இன்னும் தெரியவில்லை.

(முற்பகல் 10-40)

திரு எப். எம். இராசரத்தினம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய துணைக் கண்டத்தில் தென்கோடி முனையில் இருக்கிற குளச்சல் துறைமுகம் ஒரு இயற்கை

துறைமுகம். கரை அருகில் கப்பல் நிறுத்துவதற்கு அதிக வசதி வாய்ப்புள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகம். எனவே அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதியும், குமரி மாவட்டம் மற்றும் தென் மாவட்டங்களின் வளர்ச்சியைக் கருதியும், நடப்பு நிதியாண்டிலாவது குளச்சல் துறைமுகம் திட்டம் நிறைவேற்றப்படுமென்று அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி தான் இவ்வளவு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே தொடர்ந்து நிலைமைகளுக்கேற்ப, நிதிப் பிரச்சினை, மற்ற எல்லா பிரச்சினைகளையும் அடிப்படையாக வைத்து இந்தப் பணியைச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சியெடுக்கும்.

துறையூர் வட்டம் பச்ச பெருமாள்பட்டியில் கூட்டுறவு ஆடு வளர்க்கும் சங்கம்.

56—(*வினா எண். 6980)—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் வட்டம், பச்ச பெருமாள்பட்டி தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்களுக்கென கூட்டுறவு ஆடு வளர்க்கும் சங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே (அ) துறையூர் வட்டம் பச்சபெருமாள்பட்டியில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்களுக்கென ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க கோரி விண்ணப்பம் எதுவும் வரவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

நெல்லிக்குப்பம் தொகுதி, திருவந்திபுரத்தில் சுற்றுலா விடுதி.

57—(*வினா எண். 9356)—திரு துரை அன்பரசன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் தொகுதியில் அருள்மிகு தேவநாதசுவாமி ஆலயம் அமைந்துள்ள திருவந்திபுரத்தில் சுற்றுலா விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.